Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate

Official Property Record



Digitally Verified Record - Powered by Verified RealEstate™

கோமங்கலம்புதூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் : திருமதி. D. மாசிலாமணி

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - கோயம்புத்தூர் மாவட்டம் - பொள்ளாச்சி வட்டம் கோமங்கலம்புதூர் ஊராட்சி புல எண்கள். 404/1, 409/1 ல் பு.ஏ.8.89 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி வரைபடம் - இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக,

பார்வை : 1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1476/2021 நாள் : 12.11.2021.

2. ஊராட்சி தீர்மானம் எண் : 130/2021, நாள் : 29.12.2021

3. கோமங்கலம் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர ஆவணம் எண் : 3219/2021 மற்றும் 3220/2021.

உத்தரவு :

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் கோமங்கலம்புதூர் ஊராட்சி புல எண்கள் 404/1, 409/1 -ல் பு.ஏ.8.89 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கோயம்புத்தூர் மாவட்டம் அனுமதியின்படியும் பார்வை 2-ல் காணும் இவ்வூராட்சி தீர்மானத்தின்படியும் M.மனோகரன், M.மகாலட்சுமி என்பவர்களுக்கு கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. நகர் ஊரமைப்பு ஆணையர் கோயம்புத்தூர் மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர் அவர்களின் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்கக் கூடாது.

3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும், கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்கு குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.

4. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற வேண்டும். கட்டிடப்பணி முடிவுற்றவுடன் வீட்டு வரி செலுத்தவும் வேண்டும்.

5. மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

6. மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவார்.

7. மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மான எண்ணும் நாளும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / எவ்வித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழை வாயிலில் 6" x 4" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.

8. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.

9. வரைபடம் அங்கீகாரம் 1994-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.

10. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்ப்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

11. நில உபயோக மாற்றத்திற்காக தொகை சந்தை மதிப்பில் 3% ரூ.1,25,100/- உரிய தலைப்பில் செலான் எண் : 20211208948922, நாள் : 08.12.2021 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

12. பரிசீலனை கட்டணம் ரூ.1,000/- செலான் இரசீது எண் : 0211209002800000090 மற்றும் அபிவிருத்திக் கட்டணம் 1 சென்ட்டிற்கு ரூ.350/- வீதம் 570 சென்ட்க்கு ரூ.1,99,500/- செலான் இரசீது எண் : 0211209002800000124 ஊராட்சி நிதியில் செலுத்தப்பட்டுள்ளது.

13. பார்வையில் காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

14. மேலே கண்ட நிபந்தனைகளின் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

இணைப்பு :

அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடம் - 1

மனைப்பிரிவு நிபந்தனைகள் - 1

D. மாதேஸ்வரமணி
தலைவர்
கோமங்கலம்புதூர் ஊராட்சி
பொள்ளாச்சி (தெற்கு)

பெறுநர் :

திரு.மனோகரன்,
த/பெ. மயில்சாமி,
திருமதி.மகாலட்சுமி,
க/பெ. மனோகரன்,
க.எண். 8/1, ரத்தின சபாபதிபுரம்,
கோட்டாம்பட்டி, பொள்ளாச்சி.

நகல் :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோயம்புத்தூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கோயம்புத்தூர்.
3. சார்பதிவாளர் கோமங்கலம்.
4. இருப்புக் கோப்பிற்கு,

கோமங்கலம்புதூர் ஊராட்சி தீர்மான நகல்

2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ம் தேதி (29.12.2021) புதன் கிழமை காலை 11.00 மணிக்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண முறை கூட்டத்தின் நடவடிக்கை விபரம் :

முன்னிலை : திருமதி.D.மாசிலாமணி

வ. எண்.	பொருள் - 6	தீர்மானம்
1.	பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கோமங்கலம்புதூர் ஊராட்சி கிராமம் க.ச.எண்கள். 404/1, 409/1 நெ. காலைகளில் 8.89 ஏக்கர் நிலத்தினை மனப்பிரிவுகளாக பிரித்திட M.மனோகரன்-1, த/பெ.மயில்சாமி, M.மகாலட்சுமி-2 க/பெ. M.மனோகரன், கதவு எண். 8/1, ரத்தின சபாபதிபுரம், கோட்டாம்பட்டி, பொள்ளாச்சி, என்பவர்களின் விண்ணப்பத்தின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண். 1476/2021 உள்ள கடிதத்தின்படியும், மனைப்பிரிவு, அங்கீகார எண். ம.வ/கோ.ம. எண் : 220/2021 நாள் : 12.11.2021-ன்படியும் கோமங்கலம் சார்பதிவாளர் தான ஆவண எண்கள். 3219/2021, 3220/2021 நாள் : 17.09.2021-ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய பரிசீலனை கட்டணம் ரூபாய்.1000/- பலவகை இரசீது நாள் 08.12.2021-ன்படி செலுத்தப்பட்டுள்ளது. பாரத மாநில வங்கி பொள்ளாச்சி கிளையில் மனைப்பிரிவு மொத்த இடத்தில் விற்பனை மதிப்பில் 3% தொகை உரிய அரசு தலைப்பில் செலான் எண். 20211208948922-ல் ரூபாய்.1,25,100/- (ஒரு இலட்சத்தி இருபத்தி ஐந்தாயிரத்து நூறு) நாள் : 08.12.2021-ன்படி செலுத்தியதை தொடர்ந்து வளர்ச்சி கட்டணம் சென்ட் 1-க்கு ரூ.350/- வீதம் 570 சென்ட்டுக்கு ரூபாய்.1,99,500/- செலான் எண் : 02112090028000000124 நாள் : 09.12.2021-ன்படி செலுத்தியதை அடுத்து மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கிட மன்ற அனுமதி வேண்டல். /உண்மை நகல்/	**தீர்மான எண் :** **130/2021** **நாள் : 29.12.2021.** **அங்கீகரிக்கப்பட்டது.**

இடம் : கோமங்கலம்புதூர்
நாள் : 29.12.2021.

D.மாசிலாமணி
தலைவர்
கோமங்கலம்புதூர் ஊராட்சி
பொள்ளாச்சி (தெற்கு)

Our services go beyond

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

Smarter Tools, Stronger Decisions

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate